**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றம், தரங்கம்பாடி.</u>**

**அசல் வழக்கு எண். 49/2024**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 01 ஆம் நாள் திங்கட்கிழமை சாட்சியாகிய சதீஷ் குமார் **PW2.** இன் வாக்குமூலம், 2023 ஆம் ஆண்டு பாரதிய சாக்ஷிய அதிநியம் சட்டப்பிரிவுகளின் விதிமுறைகளின்படி **திருமதி. P.கனிமொழி, B.L.,** மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், தரங்கம்பாடி அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

தேதி : 01.09.2025

| | | | |
|---|---|---|---|
| Name | : சதீஷ் குமார் | | |
| Father /Husband Name | : சீதாராமன் | Court | : |
| Village | : வட்டாட்சியர், தரங்கம்பாடி | Taluk | : |
| Calling | : | | |
| Age | : 48/2025 | | |

<u>சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.</u>

<u>முதல் விசாரணை:</u>

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2 வது சாட்சி ஆவேன். நீதிமன்றத்திலிருந்து எனக்கு கிடைக்கப்பெற்ற அழைப்பாணையின் பேரில் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். பொறையார் கிராமம், பழைய புல எண். 172/1A ன் மொத்த விஸ்தீரணம் 3.37.5 ெஹக்டேர். ராமசாமி பிள்ளை என்பவரது பெயரில் மேற்படி புல எண்ணானது 172/1A1A என உட்பிரிவு செய்யப்பட்டு அதன் விஸ்தீரணம் 1.35.0 ெஹக்டேர் என அ பதிவேட்டில் பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆனால் , கிராம புல வரைபடத்தில் புல எண். 172/1A1A என்பதற்கு பதிலாக புல எண். 172/1A1B என தவறாக குறிப்பிடப்பட்டிருந்தது. 29.10.2010 அன்று தரங்கம்பாடி வட்டாட்சியர் செயல் முறை ஆணை ந.க.எண். 6072/10 D2 ன் படி புல எண். 172/1A1A என்ற இடத்தில் புல எண். 172/1A1B எனவும் புல எண். 172/1A1B என்ற இடத்தில் புல எண். 172/1A1A என கிராம புல வரைபடத்தில் திருத்தம் செய்து ஆணையிடப்பட்டுள்ளது. பொறையார் கிராம அ பதிவேட்டின் உண்மை நகல் **சாசாஆ 1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. புல எண் 172 ற்கான கிராம புல வரைபடத்தின் உண்மை நகல் **சாசாஆ 2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.29.10.2010

தேதியிட்ட தரங்கம்பாடி வட்டாட்சியர் அவர்களின் செயல்முறைகளின் உண்மை நகல் **சாசா ஆ 3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி புல எண்172/1A ல் அம்மாவாசை என்பவர் பெயருக்கு அ பதிவேட்டில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதி கலைவாணி பெயரில் மேற்படி புல எண்ணில் உட்பிரிவு செய்யப்பட்டுள்ளதா என்றால் புல எண் 172/1A3 என உட்பிரிவு செய்யப்பட்டு அதன் பிறகு மேற்படி புல எண். 172/9 என கலைவாணி, சாமிநாதன், சூர்யா ஆகியோர் பெயரில் பட்டா எண். 1580 என மாற்றப்பட்டுள்ளது. அதன் விஸ்தீரணம் 1943 சதுர மீட்டர் ஆகும்.